--

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.107/2024**

பெயர்–திருமதி.கண்ணம்மாள் நாள்.04.02.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனது பெயரில் அரசு வழங்கிய பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். பட்டாவை தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். அசல் வீட்டு வரி ரசீதை தாக்கல் செய்யாமல், தகவர் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பட்டா, வீட்டு வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். தாவா சொத்திற்கு 1–ம் பிரதிவாதி பெயரில் வீட்டு வரி ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். எவ்வாறு 1–ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்டுள்ளது என எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதியிடம் பஞ்சாயத்து செய்து, பணம் பெற்றுக்கொண்டு 1–ம் பிரதிவாதியிடம் விற்றுவிட்டதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால், உண்மையல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.04 16:10:55 +0530

District Munsif